# ‘மனப்பிரிகை’யில் பெண்ணியப் பதிவுகள்



**செ. லிட்டில் பிளவர்**

இருபதாம் நூற்றாண்டின் இக்கால இலக்கிய வகைகளில் நாவல் இலக்கியத்திற்குச் சிறப்பான இடம் உண்டு. தமிழ் உரைநடையின் வளர்ச்சிக் கட்டத்தில் தமிழ் நாவல்களே முதலிடம் பெறுகின்றன.

நாவல் என்பது “மனித உறவுகள், எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றை விளக்கிக் காட்டும் உரைநடையின் அமைந்த நீண்ட கதை” ஆகும்.

அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு என்ற கொடுமையிலிருந்து விலகி பெண்கள் எழுத்துத் துறையில் கால்பதித்தனர். அவ்வாறு வந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் ஜெயந்திசங்கர் அவர்கள். சிங்கப்பூர் மக்களைக் குறிப்பாகத் தமிழ்ச் சமூகத்தை வெறும் தகவல்களாகவும், புள்ளி விபரங்களாகவும் அறிந்து வந்த உலகத் தமிழ் வாசகனைப் பிரபஞ்ச வாழ்வனுபவமாக உணர வைத்தது இவரது எழுத்தின் வெற்றி ஆகும். இவரது நாவலான மனப்பிரிகையில் வரும் பெண்கள் தங்கள் வாழ்வில் எவ்வளவோ துன்பங்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் கடந்து ஒரு மன உறுதியோடு வாழும் புதுமை பெண்களாக உள்ளனர் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

### குடும்பத்தில் பெண்நிலை:-

குடும்பத்தில் பொதுவாக கணவன் மனைவி உறவுநிலை மிகவும் நெருக்கமானதாகக் கருதப்படுகிறது. இருவரும் ஒருவருக்கொருவர் மிகுந்த அன்பும், பாசமும், அரவணைப்பும் கொண்டு குடும்பத்தில் திகழ வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இப்புதினத்தில் வரும் சண்முகம் கஸ்தூரி தம்பதியரின் வாழ்க்கையில் இப்புரிதல் என்ற உண்மையான அன்பு இல்லை. இதை ஆசிரியர் பின்வரும் நிகழ்ச்சியின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

திருமணத்திற்குப் பின்பு சண்முகத்திற்கு இருந்த தீய நட்புகளும், குடிபழக்கமும் கஸ்தூரிக்கு ஆழ்ந்த வருத்தத்தை தந்தது. அவரைத் திருத்த முடியாமல் ஒரு நாள் கண்டித்து சொன்ன போது “உனக்கு புலம்ப மட்டும் தான் தெரியும். நீ இல்லன்னா நான் ரொம்ப சந்தோசமாக இருப்பேன். ஊரெல்லாம் தேவைக்குப் பால் கெடைக்க ஒரே ஒரு செம்பு பாலுக்கு ஒரு கறவமாட்டையே விலைக்கு வாங்கின கதையாயிடிச்சே எங்கதை” என்று சொல்லி தன் உள்ளத்தில் புதைந்து கிடந்த அனைத்து எண்ணங்களையும் வெளிப்படுத்திவிட்டார். இவற்றையெல்லாம் கேட்ட கஸ்தூரிக்கு வாழ்க்கையின் மீது பற்று இல்லாமல் போனது.

சண்முகம் தன் நண்பர்களுடன் குடிப்பதற்காக பாதாம் தீவிற்கு போனதும், பாலியல் தொழிலாளிகளிடம் அவருக்கு இருந்த தவறான உறவும் யாருமே எதிர்பார்க்கத்தக்கவையாக இருந்தன. இதனால் கஸ்தூரி தன் கணவனை ஒதுக்கி வைத்தாள். இத்தகைய தீய குணங்களெல்லாம் கஸ்தூரி திருமண வாழ்க்கையின் மீது அக்கறை இல்லாமல் போனதற்குக் காரணமாக அமைந்தன.

முனைவர்பட்ட
பகுதி நேர ஆய்வாளர்,
தமிழ்த்துறை, பழனி
ஆண்டவர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி,
பழனி.

## கற்புநெறி:-

சங்ககால மக்களிடையே இல்லற வாழ்க்கை சிறப்பாக போற்றப்பட்டது. ஆயினும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு, ஆகியவற்றைப் பெண்கள் அணிகலன்களாகக் கொள்ள வேண்டும். பெண்ணுக்குரிய பண்புகளின் தலையாயப் பண்பாகக் கற்புநிலை பேசப்பட்டது. கற்பு பெண்பாலருக்கு மட்டுமே வலியுறுத்தப்பட்டது. இந்தக் கருத்தின் வழி ஆணுக்கொரு நீதி இருந்து வந்ததை நாம் அறிய முடிகிறது.

சந்தியா தன் அப்பாவிடம் கோபியைத் திருமணம் செய்ய விரும்புவதாகவும் அதற்கு முன் தாங்கள் இருவரும் தனியே ஒரே வீட்டில் வாழப் போவதாகவும் கூறினாள். அதற்கு அவர் "சந்தியா உனக்கு நம்ம கலாச்சாரத்துல கற்புனு ஒண்ணு இருக்கிறது தெரியுமா?" என்று கேட்டதற்குப் பதில் சொல்லாமல் யோசித்துக் கொண்டிருந்தாள். சந்தியாவைப் பொறுத்தவரையில் நேர்மை தான் கற்பு என்று நினைப்பவள்.

"சரி அத விடு கற்புன்னா உனக்குத் தெரிஞ்சிருக்க நியாயமில்லை. இன்னொரு நாளைக்கு அதப்பத்திப் பேசுவோம். நம்ம கலாச்சாரம் என்ன ? கல்யாணம் ஆயிரங்காலத்துப் பயிர் என்று நம் முன்னோர்கள் சொன்னதும், செஞ்சதும் சும்மாவா. உனக்கு எப்படி இப்படியெல்லாம் புத்தி போவது"என்று சண்முகம் சொன்னாலும் அதையெல்லாம் கேட்பதற்குச் சந்தியா தயாராக இல்லை. கற்புநெறி பற்றி தன் மகளிடம் விவாதம் பண்ணும் சண்முகம் உண்மையில் அவரது வாழ்வில் அவர் கற்பு நிலையைப் பின்பற்றத் தவறினார் என்பதை அவர் புரிந்து கொள்ளவில்லை. இங்கே பெண் மட்டுமே கற்பு நெறியில் வாழ தலைப்படுத்தப்படுகிறாள்.

## தவறான சிந்தனையின் விளைவு:-

பெண்களின் தவறான சிந்தனைகளாலும், நடவடிக்கைகளாலும், முடிவுகளாலும் ஏற்படும் விளைவுகளையும், காதலனோடு ஓடிய இளம்பெண்ணின் நிலையையும், அவளுடைய குடும்பத்தாரின் நிலையையும், தன்னுடைய தவறான சிந்தனையால் வாழ்க்கையை இழந்த பெண்ணின் நிலையையும் ஆசிரியர் அருமையாகக் காட்டியுள்ளார்.

சந்தியா கோபியை விரும்புவதாகவும் அவனுடன் தனி வீட்டில் வாழப் போவதாகவும் தன் வீட்டில் சொன்னபோது அதை யாரும் ஏற்கவில்லை. அதையும் மீறி சந்தியா கோபியுடன் தனிக்குடித்தனம் சென்றாள். ஏதிர்பாராத நிலையில் கருவுற்றாள். குழந்தையைக் காரணம் காட்டித் திருமணம் செய்து கொள்வேன் என்று கூறிய கோபி கரு கலைந்தவுடன் சந்தியாவை ஒதுக்கி வைக்க ஆரம்பித்தான். தன் அண்ணனிடம் சென்று நாங்கள் இருவரும் பிரிந்து விடப் போகிறோம் என்று கூறினான். கோபி தன் அண்ணனைச் சந்தியாவிடம் பேசச் சொல்லி அனுப்பினான்.

ஒருநாள் கோவிந்த் சந்தியாவிடம் "நெறைய பேசிட்டேன் அவனோட. பேசாமப் பிரிஞ்சுடு. அதுதான் உங்க ரெண்டு பேத்துக்கும் நல்லதுன்னு எனக்குத் தோனுது சந்தியா" என்று சொல்லிவிட்டார். கோபியிடமிருந்து இந்த முடிவைச் சந்தியா எதிர்பார்க்கவில்லை. ஒரு பெண்ணின் தவறான சிந்தனையால் அவளுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தை இங்கே காணமுடிகிறது.

## ஆணாதிக்கம்:-

நமது சமூகத்தில் ஆண்கள் பெண்களை அடக்குவது என்பது தனிப்பட்ட உரிமையாகப் பார்க்கப்படுகிறது. பெண் தன்னுடைய சிறுவயதிலிருந்தே ஆணின் அடக்குமுறைக்கு ஆளாகிறாள். ஆண் தனது ஆதிக்கத்தை எதிர்பால் இனமான பெண்ணின் மீது செலுத்தும் நிலை ஆணாதிக்கம் எனலாம். நமது பண்பாட்டு நடவடிக்கைகள் ஆணிற்கு வேறானதாகவும் பெண்ணிற்கு வேறானதாகவும் கூறப்பட்டுள்ளது. ஆண் வளர்க்கப்படுவதைப் போல பெண் வளர்க்கப்படுவதில்லை.

கணவன் மனைவி என்ற உறவில் அனுசரித்துப் போகும் நிலை மிகவும் அவசியம். ஆனால் கஸ்தூரியின் வாழ்வில் அவளுடைய கணவன் சண்முகம் கோபம் கொண்டவராகவும், ஆணாதிக்கச் சிந்தனை உடையவராகவும் காணப்பட்டார். தனக்குக் கீழே ஒரு அடிமை போல தன் மனைவியை வைத்திருப்பார். தன் தங்கைக்குப் புத்தக நிலையத்தை வைத்துக் கொடுத்த அவர் தன் மனைவியை மட்டும் "வேலைக்குப் போகக் கூடாது போனா கால ஒடப்பேன்" என்று தன் மனைவியின் ஆசையை முளையிலே கிள்ளியெறிந்தவர். பெண்களை வெளியுலகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள விடமால் வீட்டுக்குள்ளே அடக்கி வைக்கும் ஓர் ஆணின் ஆதிக்கத்தை இங்கே காண முடிகிறது.

## தனிமைத்துவம்:-

ஒரு பெண் திருமணமின்றி தனித்து வாழ்ந்தால் அவளுக்குச் சமூகத்தினால் பல பிரச்சனைகள் ஏற்பட நேரிடும். சிறுவயதிலேயே தாய் தந்தையை இழந்த ராதாவிற்கு அவளுடைய அண்ணன் சண்முகம் தான் ஆதரவாக இருந்தார். இவளுக்குச் செவ்வாய் தோசம் இருந்ததால் திருமணம் என்பதே இவள் வாழ்க்கையில்

இல்லாமல் போயிற்று. ராதா தனிமையிலேயே இருந்தாள். தன்னுடைய நிலையை மறக்க வேண்டுமென்று நினைத்தாள். அப்போது சண்முகம் ஒரு புத்தக நிலையத்தை ராதாவிற்கு வைத்துக் கொடுத்தார். தன்னுடைய வாழ்நாள் முழுவதையும் புத்தக நிலையத்திலேயே கழித்துவிட்டாள். தனிமையில் இருந்த ராதாவிற்கு இப்புத்தக நிலையமே ஆதரவாக இருந்தது.

ராதா தன் வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்காதவளாக இருந்தாள். புத்தகங்களைப் படிப்பதிலும் அங்கு வருகின்ற வாடிக்கையாளர்களுடன் சிரித்துப் பேசுவதிலும் தன்னுடைய வாழ்நாளைப் பயனள்ள முறையில் கழித்தாள். சமூகத்தைப் பற்றி நினைக்காமல் அதனால் ஏற்படும் துயரங்களையும் பொருட்படுத்தாமல் தனிமையிலேயே இருந்து வந்த ஒரு பெண்ணின் நிலையை நாம் காணமுடிகிறது.

## தாய்மை உணர்வு:

பெண்மை அன்பு, அடக்கம், அழகுடன் திகழ்ந்து, திருமணமான பின் தாய்மையில் நிறைவுறுகிறது. தாயன்பு தன்னலமற்ற, கைமாறு கருதாத, எல்லையற்ற உண்மையான குறிக்கோளுடையது. சமூக மயமாக்கும் பணியில் தாய் நிலமாக இருந்து உற்பத்திப் பணியைச் செய்கிறாள். ஏனெனில் தாய்மையை இந்தியப் பண்பாடு மதிப்புடையதாக, புனிதம் நிறைந்ததாகக் கற்பித்திருக்கிறது.

கலா என்பவள் ராதாவின் புத்தக நிலையத்தில் வேலை பார்த்து வந்தாள். குடும்பத்தின் வறுமை காரணமாக ராதாவிடம் தங்கியிருந்து வேலை பார்த்தாள். ராதா கலாவுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்தாள். கலாவின் வீட்டிற்குப் பணமும் அனுப்பி வைப்பாள். கலாவை வேலை பார்ப்பவள் என்று நினைக்காமல் ஒரு மகளாகவே நினைத்தாள். ராதா கலா ஆகிய இருவரின் எளிமையான வாழ்க்கை முறையைப் பார்க்கும் போது சந்தியாவிற்குப் பொறாமையாக இருக்கும். கலா உற்சாகத்துடன் வேலை பார்ப்பதற்குக் காரணம் என்னவென்றால் அவளுக்கும் அவளுடைய அத்தை பையன் முருகன் என்பவருக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது.

ஒரு நாள் கலாவிற்கு வந்த அழைப்பில் அவளுடைய அத்தை பையன் இறந்து விட்டதாகச் செய்தி வந்தது. அதைக் கேட்டு அழுது புலம்பினாள். ராதா கலாவிற்கு ஆறுதல் சொன்ன போது அதை ஏற்க மறுத்து விட்டாள். இனி எனக்கென்ன வாழ்க்கை என்று பேச்சைத் தொடங்கும் போதே ராதா கலாவின் வாயை அடைத்து உனக்கென்ன வயசா போயிடிச்சு என்று கேட்டாள். "கலா நீ மனச மட்டும் விட்றாத இப்ப உனக்கென்ன வயசாச்சி சொல்லு?" என்று ராதா ஆறுதல் கூறினாள். கலாவின் மனநிலையைப் புரிந்து கொண்ட ராதா அவளுக்கு இன்னொரு தாயாகவும் இருந்து வந்தாள்.

## பெண்ணின் மனவலிமை

ஒரு பெண்ணின் மனசு என்பது மென்மைத் தன்மையுடைய பூவைப் போன்றது. அந்த மென்மையான மனதில் எவ்வளவு துயரங்களைத் தான் வைத்திருப்பது.

சந்தியா தான் விரும்பியவனால் கைவிடப்பட்டாள். இதனால் எவ்வளவோ துன்பங்களையும் மற்றவர்களின் இழிவான சொற்களையும் தாங்கிக் கொண்டாள். அத்துன்பத்திலிருந்து மீண்டு அவள் வாழ ஆரம்பித்தாள். இங்கே அவளின் மனத்தைரியம் வெளிப்படுகின்றது.

ராதாவின் வாழ்க்கையில் திருமணம் என்பதே இல்லை. ஒரு குறிப்பிட்ட வயதிலிருந்தே தனிமை நிலையை நாடி வாழ்ந்தாள். சமூகம் தன்னைப் பற்றி என்ன பேசினாலும் கவலை கொள்ளாது அதைப் பற்றி நினைக்காமல் மன உறுதியுடன் வாழ்ந்து வந்தாள்.

கலா தன் வாழ்க்கையே முருகன் தான் என்று எண்ணி வாழ்ந்தவள். அவன் இறந்தவுடன் நிலைகுலைந்து விடுகிறாள். அப்போது ராதா அவளைத் தேற்ற, தன் குடும்பத்திற்காக தன் துன்பத்தையெல்லாம் பொருட் படுத்தாமல் மன உறுதியுடன் வாழத் தலைப்பட்டாள்.

தங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட துயரங்களைக் கருத்தில் கொள்ளாது மன வலிமையுடன் இருந்த பெண்களின் நிலையை ஆசிரியர் அருமையாகக் காட்டியுள்ளார்.

## முடிவுரை:

உரைநடையில் ஒன்றாகிய புதினம் தோன்ற ஒரு சீரிய காரணம் உண்டு. உலகிடையே வாழும் மனிதன் மனத்தைக் கவர்ந்த பலவற்றுள் முக்கியமானது எதுவெனில் அவனைப் போன்ற மற்றைய மனிதர்களின் வாழ்க்கையே தான். மக்களின் மனதில் தோன்றும் உணர்ச்சிகள், போராட்டங்கள் முதலியவையே இப்புதினங்கள் பூகிழ்க்கத்தக்க நிலைக்களங்களாயின. வாழ்க்கையில் காணப் பெறும் ஆழமான உணர்ச்சிகள், போராட்டங்கள் இவற்றை அடிப்படையாகக் கொண்டு தோன்றும் புதினங்களே மிகச் சிறப்புடையவனாகக் கருதப்படுகிறது. ஆணாதிக்கத்தினால் பெண் அடக்குமுறையும், மன உறுதியோடு போராடும் பெண்களின் தன்னம்பிக்கையும் பற்றி ஆசிரியர் அருமையாகக் காட்டியுள்ளார்.